[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 22

6. சாலைகள் அமைப்பதில் இவ்வரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இதன் பொருட்டு, இந்தத் துணை மதிப்பீடுகளில் மேலும் ரூ. 5.27 கோடி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. உலக வங்கி சத்துணவுத் திட்டத்தின் கீழ் துணை நிலையங்களை அமைப்பதற்காக ரூ. 1.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. போக்குவரத்து நிறுவனங்கள் திறமையுடன் செயல்படுவதற்கு உதவி அளிக்கும் பொருட்டு, இந்தத் துணை மதிப்பீட்டில் பல்லவன் போக்குவரத்து நிறுவனத்திற்கு ரூ. 2.59 கோடியும் தந்தை பெரியார் போக்குவரத்து நிறுவனத்திற்கு ரூ. 1.50 கோடியும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

8. முதியோர் உதவித்தொகை, கைம்பெண்கள், உடல் ஊனமுற்றவர் உதவித்தொகை வழங்கும் தற்போதைய திட்டத்தில் மேற்கொண்டும் 17,934 பேர்களும், வேளாண்மைத் தொழிலாளர்களில் 30,000 பேர்களும் உதவித் தொகை பெறுவர். இக்கூடுதல் செலவிற்கு அனுமதி வழங்குமாறு இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

9. 150 காவல் நிலையங்களை ரூ. 3.50 கோடி செலவில் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ரூ. 75 இலட்சம் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10. அவையில் வைக்கப்பட்டுள்ள 1981-82 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கையில் உள்ள சில முக்கியச் செலவினங்களை மட்டுமே எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகைகளை வழங்கி, திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன். வணக்கம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 10-20)

(5) அறிவிப்பு.

இறுதித் துணை நிதி அறிக்கை 1981-82 வெட்டுத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981-82 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவைகளை பேரவையின் 205-வது விதிக்கிணங்க 23-3-1982 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.